


26. 06. 2026

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு.நரேந்திரமோடி 3 நாள் அரசுமுறை பயணமாக சீஷல்ஸ் நாட்டிற்கு நாளை செல்கிறார்.
- போதை பொருளுக்கு எதிரான ஒருங்கிணைந்த போராட்டத்தின் அவசியத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.
- போதை பொருள் இல்லா தமிழகத்தை உருவாக்குவதற்கு விழிப்புணர்வு மிக அவசியம் என முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.
- சட்ட விரோத சாய ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திருமதி விஜயலெட்சுமி எச்சரித்துள்ளார்.
- 5. Belfast-இல் இந்தியா - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர் சீஷல்ஸ்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 3 நாள் அரசுமுறை பயணமாக சீஷல்ஸ் நாட்டிற்கு நாளை செல்கிறார்.

அந்நாட்டின் தேசிய தின பொன்விழா கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் பிரதமர் அந்நாட்டு அதிபர் Patrick Herminie உடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

சீஷெல்ஸ் நாடாளுமன்றத்தில் பிரதமர் உரையாற்றுவதொடு இந்திய வம்சாவளியினருடனும் கலந்துரையாடுகிறார்.

பொன்விழா கொண்டாட்டங்களில் இந்திய பாதுகாப்பு படையினர் மற்றும் இந்திய கடற்படையின் இரு கப்பல்களும் பங்கேற்கும் என வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 135-வது முறையாக நாளை மறுநாள் காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசை, mygov இணையதளம், newsonair செயலியில் இந்நிகழ்வு நேரடியாக ஒலிபரப்பாகும்.

தொடர்ந்து பதினொன்றரை மணிக்கும் இரவு 8 மணிக்கும் இதன் மொழியாக்கம் இடம்பெறும்.

*************

பங்கிம் சந்திர சாட்டர்ஜி

வந்தே மாதரம் தேசிய பாடலை இயற்றிய பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் 188ஆவது பிறந்த நாளை ஒட்டி பிரதமர் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

வந்தே மாதரம் பாடலின் 150 ஆவது ஆண்டு நிறைவை நாடு கொண்டாடிவரும் இத்தருணத்தில், இந்த பாடல் மூலம் இந்திய விடுதலை இயக்கத்திற்கு எழுச்சியூட்டி அனைவருக்கும் உத்வேகத்தை அவர் ஏற்படுத்தியதாக பிரதமர் புகழாரம் சூட்டினார்.

*************

போதை பொருள் ஒழிப்பு தினம்

சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில் போதை பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க அனைவரும் உறுதி ஏற்க அழைப்பு விடுத்தார்.

புதுதில்லியில் போதை பொருள் தடுப்பு உயர்நிலை கூட்டத்தில் உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா, போதை பொருள் சங்கிலியை தகர்க்க தொடர் பிரச்சாரத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

அனைவரும் ஒருங்கிணைந்து போதை பொருள் பயன்பாட்டிற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட அழைப்பு விடுத்த அவர் ஆன்மீக தலைவர்கள் இளைஞர்கள் தாய்மார்கள் ஒரே தளத்தில் இணைந்து போராட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

போதை பொருள் தொடர்புகளை தகர்க்கும்போது போதை பொருள் ஒழிப்பில் நாம் வெற்றியை எட்ட முடியும் என தெரிவித்தார்.

தமிழக முதலமைச்சர் திரு.விஜய் வெளியிட்டுள்ள செய்தியில் இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கவும் குற்றங்களை தடுக்கவும் போதை பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம் என கூறியுள்ளார்.

போதை பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தமிழக அரசின் முயற்சிக்கு அனைவரும் துணை நின்று போதை பொருள் இல்லாத பாதுகாப்பான ஆரோக்கியமான தமிழ்நாட்டை உருவாக்க உறுதி ஏற்க வலியுறுத்தினார்.

தமிழ்நாட்டின் அனைத்து மாநிலங்களில் போதை பொருள் பயன்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் Start Run Stop Drug விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் இன்று நடைபெற்றது.

சென்னையில் மாரத்தான் ஓட்டத்தை துவக்கி வைத்த முதலமைச்சர் தலைமையில் உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

வாய்ஸ்

தஞ்சை அன்னை சத்யா விளையாட்டரங்கில் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தை மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.ஷாஜகான் தொடங்கிவைத்தார்.

ராணிப்பேட்டையில் போதையில்லா தமிழ்நாடு என்பதை வலியுறுத்தும் விழிப்புணர்வு மாரத்தானை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.காந்தி ராஜூம்

விருதுநகரில் மாநில சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரியும் தொடங்கிவைத்தனர்.

அரியலூர் பெரம்பலூர் தர்மபுரி தூத்துக்குடி விழுப்புரம் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை தொடங்கிவைத்தனர்.

*************

முதலமைச்சர் பதக்கம்

இதனிடையே போதை பொருள் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தடுப்பு பணிகளில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய கடலூர், ராமநாதபுரம் காவல்துறை கண்காணிப்பாளர்கள் உட்பட 15 பேருக்கு முதலமைச்சர் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்பதக்கங்கள் வரும் சுதந்திர தினத்தன்று முதலமைச்சரால் வழங்கப்படும்.

*************

அன்னபூர்ணா தேவி

வளர்ச்சி அடைந்த இந்தியா 2047 என்ற இலக்கை அடைய பெண்கள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய பெண்கள் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

கிர்கிஸ்தானின் பிஸ்கெக் நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மகளிர் கூட்டத்தில் காணொலி மூலம்

இன்று உரையாற்றிய அவர், பெண்கள் தலைமையிலான வளர்ச்சியில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக கூறினார்.

நம் நாட்டில் 10 கோடிக்கும் அதிகமான பெண்கள் சுய உதவிக்குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதாகவும், மகளிர் சக்தி மற்றும் இரண்டாம் கட்ட ஊட்டசத்து இயக்க திட்டங்களினால் பெண்களின் பாதுகாப்பு, நலவாழ்வு, பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருவதாக கூறினார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளுடன் பெண்களின் பொருளாதார தலைமைத்துவம் குறித்த அனுபவங்களை பகிர தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

*************

பியூஷ்கோயல்

இந்தியா - இங்கிலாந்து இடையே விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இரட்டை பங்களிப்பு ஒப்பந்தம் வரும் 15ஆம் தேதிமுதல் நடைமுறைக்கு வர உள்ளது.

மத்திய வர்த்தக துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் இங்கிலாந்து நாட்டின் வர்த்தக அமைச்சர் பீட்டர் கை-லுடன் வர்த்தக ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*************

மொஹரம்

தியாகத்தை நினைவு கூறும் மொஹரம் இஸ்லாமிய பெருமக்களால் இன்று அனுசரிக்கப்படுகிறது.

நபிகள் நாயகத்தின் பேரன் இமாம் ஹுசைன், உண்மை அறம் மற்றும் நீதியை நிலைநாட்ட தனது இன்னுயிரை ஈந்த தியாகத்தை நினைவு கூறும் வகையில் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்டுள்ள செய்தியில் உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டும் முயற்சியில் ஹஸ்ரத் இமாம் ஹுசைனின் உறுதி அனைவருக்கும் ஊக்கமளிப்பதாக கூறியுள்ளார்.

இத்தினத்தை ஒட்டி நாகூர் தர்காவில் நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஏராளமானோர் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

வேலூரில் இஸ்லாமியர்கள் மொஹரத்தை ஒட்டி துக்க பாடல்களை பாடிய வண்ணம் கருப்பு உடை அணிந்து ஊர்வலமாக சென்றனர்.

*************

விஜயலெட்சுமி

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் குமாரபாளையம் பகுதிகளில் சட்ட விரோதமாக செயல்படும் சாய ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திருமதி விஜயலெட்சுமி எச்சரித்துள்ளார்.

இப்பகுதிகளில் நள்ளிரவு ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், இந்த ஆலைகள் இன்னும் ஒரு மாதத்திற்குள் கழிவுநீரை

சுத்திகரிப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

வாய்ஸ்

*************

சிவஞானம்

விடுதலை போராட்ட வீரர் மா.பொ.சிவஞானத்தின் 121ஆவது பிறந்த நாளை ஒட்டி சென்னை தியாகராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில அமைச்சர்கள் திரு.ஆனந்த் திரு.வெங்கட் ரமணன் திரு.ராஜ்மோகன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*************

போலியோ

தேசிய போலியோ சொட்டு மருந்து முகாம் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

தமிழகத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், உள்ளிட்ட 43 ஆயிரத்து 51 மையங்களில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நாளை மறுநாள் ஆயிரத்து 7 மையங்களில் சொட்டு மருந்து வழங்கப்பட இருப்பதாக ஆட்சித்தலைவர் பத்மஜா தெரிவித்துள்ளார்.

*************

சிவகங்கை

சிவகங்கை மாவட்டத்தில் சமூக விரோதிகள் அதிகம் உள்ள பகுதிகளில் ஜி.பி.எஸ். பொருத்திய இருசக்கர வாகனங்களில் ரோந்து பணியை மேற்கொள்ள ஆல்ஃபா அணி போலீஸ் என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டிருப்பதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சிவபிரசாத் கூறியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*************

கோவில்

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் உண்டியலில் ஒருகோடியே 61 லட்ச ரூபாய், 603 கிராம் தங்கம், 5 ஆயிரத்து 780 கிராம் வெள்ளி காணிக்கையாக கிடைக்கப்பெற்றுள்ளதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

*************

யானை

கோவை வனக்கோட்டத்திற்குட்பட்ட சிறுமுகை வன சரக பகுதியில் தாயை பிரிந்து தவித்த குட்டி யானை மீட்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் டாப் சிலிப் கோழி கமுத்தி யானைகள் முகாமிற்கு பாதுகாப்பாக அது கொண்டுவரப்பட்டுள்ளது.

குட்டி யானையின் உடல் நலம் சீராக உள்ளதாகவும், மருத்துவ கண்காணிப்பில் அது வைக்கப்பட்டுள்ளதாகவும் வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

*************

வானிலை

வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் சென்னை காஞ்சிபுரம் செங்கல்பட்டு திருவண்ணாமலை ராணிப்பேட்டை மாவட்டங்களில் நாளை கன மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

*************

கிரிக்கெட்

இந்தியா - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி இன்றுமாலை 6 மணிக்கு பெல்ஃபாஸ்டில் நடைபெறுகிறது.

*************

ஹாக்கி

லண்டனில் நடைபெறும் சர்வதேச ஹாக்கி ப்ரோ லீக் போட்டியில் இந்தியா இன்று இரவு பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஏற்கனவே நடைபெற்ற போட்டியில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது குறிப்பிடத்தக்கது.

*************

கால்பந்து

ஃபிஃபா உலக கோப்பை கால்பந்து போட்டியின் நாக் அவுட் சுற்றுக்கு     ஆஸ்திரேலியா ஈக்வடார் ஐவெரிகோஸ்ட் ஜப்பான், ஸ்வீடன், அணிகள் முன்னேறியுள்ளன.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது